திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, தென்னூர்க்காடு மாவட்டத்தில் ஓர் வரி என்று தெரிவித்தார்கள். அது எந்த வரி என்று அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் துணை வினு, மூல வினுவை ஒட்டியதாக இல்லாமலிருப்பதால் இதை அனுமதிக்க முடியவில்லை. வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

2. அமைச்சரின் விளக்கம்.

துணை வினுவின்–விடைக்குத் திருத்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 173-வது வினுவிற்கு விடை அளித்த மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் ஒரு துணை வினுவிற்கு அளித்த விடையில் ஒரு திருத்தம் செய்ய விரும்புகிருர்கள். அதை அனுமதிக்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : சேலம் மாவட்டத்தைப் பற்றி ஒரு விவரம் கேட்டார்கள். முதலில் இந்தக் குறிப்பு என்னிடம் இல்லாத காரணத்திஞல் அந்தக் குறிப்பை இப்போது கூற விரும்புகிறேன்.[a] சேலம் மாவட்டத்தில் உள்ள குளங்கள், இப்போது புதிதாக அமைக்கப்பட்ட குளங்கள் இரண்டு. ஒன்று, செம்மலை சிவிலிக்கரடு, ஓமலூர் தாலூகாவில். இன்னென்று, கன்னூரப்பனை கிராமத்தில் உள்ளது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந் தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. கவன ஈர்ப்பு.

குமரி மாவட்டத்தில் பருவமழையின்மையும், வரிகள் தள்ளுபடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்கள் 41-வது விதியின்கீழ், உணவுத்துறை அமைச்சரவர்களின் கவனத்தை ஈர்க்க ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, I call the attention of Hon. the Minister for Food to a matter of urgent public importance, namely withering of crops in Kanyakumari district due to the failure of monsoon and the need for remission of land revenue and water-cess and also adequate supply of foodgrains to tide over the crisis in the ensuing lean months of this year.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் தலைவரவர்களே, பருவமழை பொய்த்ததன் காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் பயிர்கள் கருகிக் கொண்டிருப்பதாகவும், அதனல் நிலவரியையும், தண்ணீர் வரியையும் தள்ளுபடி செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ள தென்றும், உணவு தானியங்கள் போதுமான அளவு வழங்கப்பட வேண்டு மென்றும் நாட்ட ஈர்ப்பு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

பயிர் விளைந்து கொண்டிருந்த 65,000 ஏக்கரில், 20,000 ஏக்கர் நெற்பயிர்கள் வடகிழக்குப் பருவமழை பொய்த்ததன் காரணமாகக் கருகிவிட்டன. கிட்டும் நீரைக் கொண்டு முறைமாற்று வழிகளில் தண்ணீர் பாய்ச்சி, பயிர்கள் மேலும் கருகாமலிருக்க நடவடிக்கைகள்

---

[a] 109-ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க

மேற்கொள்ளப்படுகின்றன. பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைக்கட்டுகளி லுள்ள தண்ணீர் முடிந்தவரை சிறந்த முறையில் பயன்படுத்தப்பட்டது. பாதிக்கப்பட்ட பரப்பில் சிறப்பு பயிர் மதிப்பீட்டிற்கு ஏற்பாடு செய்யுமாறு வருவாய்க் கோட்ட அதிகாரிக்குக் கலெக்டர் கட்டளைகள் பிறப்பித்துள்ளார். வரியைத் தள்ளுபடி செய்வதற்கான செயற்குறிப்புகளை அவர் வருவாய்த் துறை வாரியத்திற்குப் பணிந்தனுப்பியுள்ளார்.

4,000 டன்கள் அரிசி கையிருப்பில் உள்ளது. கொள்முதல் செய் வதற்கான குறிக்கோள் அளவு 4,000 டன் அரிசி கிடைக்கக் கூடிய அளவு நெல் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. தஞ்சாவூர் சம்பா அறுவடையிலிருந்து அனுப்ப வேண்டிய அளவு 10,000 டன் அரிசி கிடைக்கக் கூடிய அளவு நெல்லாகும். எனவே, 18,000 டன் அரிசி கிடைக்கக்கூடிய அளவில் நெல் நம்மிடம் இருக்கும். இது மேலும் 5 திங்களுக்குப் போதுமானது.

4. 1968-69-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—(தொடர்ச்சி).

கோரிக்கை எண் 46—அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, நிதிக்கோரிக்கை. இந்த கோரிக்கை எண் 46, அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவுபற்றியது. மாண்புமிகு உணவுத்துறை அமைச்சரவர்கள் இதைக் கோருவார்கள்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,07,86,78,300 under Demand No. 46—Capital Outlay on Schemes of Government Trading."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, இதற்கான வெட்டுத் தீர் மானங்கள்.

THIRU K. VINAYAKAM : Sir, to discuss the general policy and the desirability of extending the scheme of "one measure one rupee" to the entire State instead of confining to the areas of statutory rationing, I move the cut motion standing in my name—

"That the allotment of Rs. 1,07,86,78,300 under Demand No. 46—Capital Outlay on Schemes of Government Trading — Be reduced by Rs. 100."

THIRU. R. PONNAPPA NADAR: I second the cut motion.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்களை வழி மொழியத் தேவையில்லை.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : ஐயா, "கொள்கை பற்றி விவாதிக்க"—

"கோரிக்கை எண் 46— அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,07,86,78,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.